**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 84/2016 Date:08.08.2025**

**(PW1)- Sree Magesh**

**1**ம் பிரதிவாதி தரப்பு **குறுக்கு விசாரணை**

**1.** நான் வழக்கறிஞராக உள்ளேன் என்றால் சரிதான். வாதி எனது அண்ணன் என்றால் சரிதான். எனது அண்ணனின் அதிகாரம் பெற்ற முகவராக இந்த வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து பழைய குளச்சல், தற்போது ரீத்தாபுரம் கிராமம் புதிய புல எண் 417/4 ல் ஒரு பகுதி என்றால் சரிதான். புதிய புல எண் 417/4 ல் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு மொத்தம் எத்தனை சென்ட் சொத்து உள்ளது என்றால் மொத்தம் எத்தனை சென்ட் என்று தெரியாது, ரோட்டிற்கு தெற்கே வடக்கணைய 35 சென்ட் 100 சதுர லிங்ஸ் உள்ளது.

**2.** மேற்படி ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு 35 சென்ட் 100 சதுர லிங்ஸ் க்கு உரிமை உண்டு என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்யலாம். நான் சொல்வது போல் பட்டா படியோ , ரீ சர்வே ப்ளான் படியோ, கைவசப் படியோ , கிடப்பு படியோ மேற்படி ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு நான் குறிப்பிடுவது போல் 35 சென்ட் 100 சதுர லிங்ஸ் உரிமையுள்ளது என்று என்னால் நிரூபணம் செய்ய முடியாது என்றால் சரியல்ல, முடியும்.

**3.** மேற்படி 35 சென்ட் 100 சதுர லிங்ஸ் சொத்து உட்பிரிவு செய்யப்படவில்லையென்றால் சரிதான். எனவே 35 சென்ட் 100 சதுர லிங்ஸ் சொத்திற்கு தனிப்பட்டா கிடையாது என்றால் சரிதான். அதே போல் மேற்படி 35 சென்ட் 100 சதுர லிங்ஸ் சொத்திற்கு தீர்வை ரசீதும் மேற்படி சர்வே எண் 417/4 ல் ஒரு பகுதி

என்று தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். எனவே ஆவணங்கள் அடிப்படையிலும் புதிய புல வரைப்படத்தின் அடிப்படையிலும் அளவீடு செய்தால் தான் மேற்படி 35 செண்ட் 100 சதுர லிங்ஸ் சொத்து எங்கு அமைந்துள்ளது என்பதை கண்டு கொள்ள முடியும் என்றால் சரியல்ல, ஏற்கனவே அளவீடு செய்து தான் ஒரு செண்ட் சொத்து வாங்கப்பட்டது.

**4.** அளவீடு செய்த வரைப்படம் என்னுடைய பத்திரத்துடன் இணைக்கப்படவில்லையென்றால் சரிதான். நான் கூறுவது போல் அளவீடுஏதும் செய்யப்படவில்லையென்றால் சரியல்ல. ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமி நிலத்தில் குறுக்கே ரோடு சென்று இரண்டாக பிரிந்துள்ளது என்றால் சரிதான், மேற்படி 35 செண்ட் 100 சதுர லிங்ஸ் சொத்து பிரியவில்லை. மேற்படி ரோட்டிற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்தும் வடக்கு பக்கம் உள்ள சொத்தும் ஒரே சர்வே எண்ணான 417/4 ல் உள்ள சொத்து என்றால் சரிதான். மேற்படி ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமியின் முந்தைய ஆவணத்தில் ஒரே சொத்தாக தான் மேற்படி புல எண் 417/4 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**5.** மேற்படி ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமியின் சொத்தில் மேற்படி சாலை அமைத்த போது சிறிது சொத்து சாலைக்காக எடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு ஆவணப்படி உள்ள நிலம் கைவசமில்லையென்றால் சரியல்ல. நான் கூறுவது போல் ரோட்டிற்கு தென்புறம் 35 செண்ட் 100 சதுர லிங்ஸ் சொத்து இல்லையென்றால் சரியல்ல. அரசு ஆவணங்களின் படி 35 செண்ட் 100 சதுர லிங்ஸ் சொத்து ரோட்டிற்கு தெற்கு பக்கம் கிடையாது என்றால் சரியல்ல.

**6.** மேற்படி சங்கதியை 1 ம் பிரதிவாதி தனது எதிருரையில் 35 செண்ட் 100 சதுர லிங்ஸ் சொத்து ரோட்டிற்கு தெற்கு பக்கம் கிடையாது என்று குறிப்பிட்ட பின்னரும் நான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் சரிதான். ரோட்டிற்கு தென்புறம் உள்ள சொத்தில் 19.600 செண்ட் சொத்தை செந்தில் குமாருக்கு

ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமி கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கு தென்புறம் எனது தந்தையின் 2 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரியல்ல, 1 1/2 சென்ட் நிலத்திற்கு தெற்கு புறம் அமைந்துள்ளது. மேற்படி 19.600 சென்ட் நிலத்தை தொட்டு தென்புறம் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு ஏதாவது நிலங்கள் இருந்திருந்தால் செந்தில்குமாருக்கு விலைக்கு கொடுத்த பத்திரத்தில் குறிப்பிட்டிருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**7.** ரோட்டிற்கு தென்புறம் மேற்படி 19.600 சென்ட் சொத்தின் தென்புறம் 1 1/2 சென்ட் நிலம் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு இருப்பது குறித்து எந்த முன் ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதியின் ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 19.600 சென்ட் நிலத்தை தொட்டு தென்புறம் உள்ள 1 1/2 சென்ட் நிலத்தில் எனக்கு 1 சென்ட் நிலம் கிரயம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் கூறுவது போல் மேற்படி 1 1/2 சென்ட் நிலத்திற்கு தெற்கே ஞானமணி மற்றும் நேசமணியின் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

**8.** மேற்படி சொத்து தற்போது நேசமணியின் பெயரில் இல்லையென்றாலும் அது வாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வாதியின் பெயரில் 2 சென்ட் சொத்தும் ஞானமணியின் பெயரில் 3 சென்ட் சொத்தும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாதி, ஞானமணியின் சொத்திற்கு தென்புறம் செந்தில் குமாரின் 9 சென்ட் சொத்து உள்ளது என்றால் சரிதான், செந்தில் குமாரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளார். மேற்படி செந்தில் குமார் செல்வகுமாருக்கு விலை எழுதி கொடுத்த பத்திரத்தில் மேற்படி 19.600 சென்ட் நிலத்தின் வழியாக தன்னுடைய சொத்திற்கு வருவதற்கு 3 அடி வழிப்பாதை விலைக்கு பெற்றிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**9.** மேற்படி வழிப்பாதையில் ஞானமணியின் சொத்து இடையூறாக இருந்ததால் ஞானமணியின் சொத்தையும் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்றார் என்றால் சரிதான்,

ஆனால் பாதைக்காக வாங்கின விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை கிரயம் பெற்ற பின் சாலையிலிருந்து தன்னுடைய 12 சென்ட் சொத்திற்கு 19.600 சென்ட் சொத்தில் போடப்பட்ட பாதை வழியாக வந்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல, 19.600 சென்ட் சொத்தில் எந்த பாதையும் கிடையாது. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல., வழக்கு பட்டிகை சொத்தில் இடையூறு செய்ததால் தான் விரோதம் ஏற்பட்டது. 1ம் பிரதிவாதி மீதுள்ள முன் விரோதத்தின் காரணமாக அவர் அமைத்துள்ள பாதை வழியாக அவர் செல்வதை தடுக்க வேண்டி ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு கைவசப்படி அனுபவம் இல்லாத ஞானமணியிடமிருந்து வாங்கிய 3 சென்ட் சொத்தில் ஒரு பகுதி எனக்கு கிடைக்கும் படியாக ஒரு ஆவணம் நான் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமியை சுவாதீனப்படுத்தி பெற்றுகொண்டேன் என்றால் சரியல்ல.

**10.** நான் கிரயம் பெற்ற பின் நானும் எனது தந்தையும் எனது சகோதரனும் 1ம் பிரதிவாதியுடன் சண்டை செய்ததன் காரணமாக 1ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் கேவியட் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. 25.10.2016 அன்று 1ம் பிரதிவாதி வழக்கு- சொத்தில் அத்துமீறி நுழைந்து வழக்கு சொத்தை ஆக்கிரமிக்க முனைந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கோ 1 1/2 சென்ட் நிலம் கைவசம், கிடப்பில் இல்லையென்றாலும் அவ்வாறு கைவசப்படி உரிமையில்லாத சொத்தை நான் கிரயம் வாங்கி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**11.** பட்டிகை சொத்தில் எனக்கோ என் அண்ணன், எனது அப்பாவின் கைவசத்தில் இல்லையென்றாலும் பட்டிகை சொத்து தொடர்ந்து 1ம் பிரதிவாதியின் கைவசத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் மொத்த சொத்தின் உரிமையாளரான ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமியிடமிருந்து பட்டிகை புல எண் சொத்திலிருந்து யார் எவ்வளவு நிலம் கிரயம் பெற்றார்கள் என்பதை நிரூபிக்க அவர்களை வழக்கில்

தரப்பினராக சேர்க்கவில்லையென்றாலும் அவ்வாறு சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்